# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.103/2024

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | Dr. Prabha Samiraj | **தொழில்** | **மருத்துவர்** |
| **தகப்பனார் பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **14.10.2024.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரியின் மனநல அறிக்கை குறித்து விசாரணை செய்வதற்காக எதிரியை பரிசோதனை செய்த மருத்துவர் இன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்.**

நான் தற்போது மதுரை ராஜாஜி மருத்துவமனையில் மனநல பிரிவில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். திரு. ராமசாமி, த/பெ. காளிமுத்து, என்பவர் நீதிமன்ற உத்தரவின் படி அவரது மனநல பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மருத்துவமனையில் உள்நோளியாக I.P.No.59736 ,13,09,2024 முதல் 23,09,2024 ம் தேதி வரை பரிசோதனை செய்த போது அவர் சிலசமயம் தனக்குத் தானே பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும், வித்தியாசமான முறையில் சில சமிக்கைகள் செய்த வண்ணம் இருந்தார். மேலும் அவர் போதைப்பொருள் உட்கொண்டதாக தெரிவித்தார். அவருக்கு Persecutory Delusion – ( காரணம் இல்லாமல் சந்தேகப்படும் மனநிலை) இருந்தது. மேலும் அவருக்கு பகுத்தாய்வு திறன் இல்லாமலும், தன் உடல்நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாமலும் இருந்தார். மனநல உளவியல் நிபுணர் அவருக்கு சந்தேகம் குறித்த மனநிலை இருப்பதாக அறிக்கை வழங்கியுள்ளார். மற்றும் உடல் இரத்த பரிசோதனை மற்றும் EEG செய்யப்பட்டு அது நார்மலாக இருந்தது. மேற்படியான பரிசோதனையில் அவருக்கு Schizophernia –(மனச்சிதைவு நோய்) அறிகுறிகள் இருப்பதாக கண்டறியப்பட்டது. அவருக்கு தொடர் கண்காணிப்பு மற்றும் சிகிச்சை வழங்கிட கீழ்ப்பாக்கம், மனநல மருத்துவமனைக்கு அனுப்பி தொடர் சிகிச்சை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. அவருக்கு பகுத்தறிவு திறன் மற்றும் முடிவெடுக்கும் திறன் இன்றி இருந்தார்.

மேற்படி நோயாளியை விசாரித்ததில் அவர் வேலை பார்த்த இடத்தில் மற்றும் அவர் கிராமத்தில் மற்றும் சிறையில் அவரை பலர் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தியதாகவும், சில சமயங்களில் சம்மந்தமில்லாமலும் பேசிக் கொண்டிருந்தார். அவர் கிராமத்தில் 5,6 நபர்களை வட இந்தியர்கள் கொன்றதாகவும் அவர் இருக்கும் இடத்தில் தேவையில்லாமல் ஒரு வட இந்தியர் குறுக்கு, மறுக்குமாக சென்றதினால் அவரை கொன்று விடுவார் என பயந்து அவர் கத்தி எடுத்து குத்தியதாக கூறினார். அவர் கத்தியை சில மாதங்களாவே தற்காப்புக்காக தன்னுடன் வைத்துக் கொண்டிருந்ததாகவும், மேலும் அவர் தோட்டத்தை பக்கத்து வயல்காரர் இவரை கொன்று விட்டு அபகரிக்க நினைப்பதாகவும் கூறினார். மேலும் சிறையில் ஜாதி, மத, இன வேறுபாட்டால் தன்னை ஜாடை, மாடையாக பேசுவதாகவும் கூறினார்.

இந்த மனச்சிதைவு நோயினால் மேற்படி நபர் தன்னை தாக்குவதாக எண்ணி எதிரில் உள்ள நபர்களை தாக்கி காயப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டு.

மேற்படி நபர் அவருக்கு எதிராக நடத்தப்படும் நீதிமன்ற விசாரணையின் நடவடிக்கைகளை தற்போது புரிந்து கொள்ளும் மனநிலையில் இல்லை. அவருக்கு தற்போது தொடர் கண்காணிப்பு மற்றும் சிகிச்சை தேவைப்படுகிறது.

**மேற்படி நோயாளியை பரிசோதனை செய்து நான் கொடுத்த அறிக்கை நீ.ம.சா.ஆ.1. ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.10.14 19:04:40 +0530

Additional District Judge,

Dindigul.